




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 340 | 4 Pages | 6.7.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 340 | 4 பக்கங்கள் | 6.7.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்**

**வாள துணர்வார்ப் பெறின்**

**விளக்கம்:** வாழ்க்கையை ஆராய்ந்து உணர்வாரைப் பெற்றால் நாள் என்பது ஒரு கால அளவுகோல்காட்டி, உயிரை உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் வாளாக உள்ளது.



## உக்ரைன் மீது ஒரே நாளில் 550 டிரோன்களை ஏவிய ரஷியா

கீவ், ஜூலை 6


உக்ரைன்ரஷியா இடையே 3 ஆண்டுகளுக்கு மேலாக போர் நடந்து வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், இந்த போரை நிறுத்துவதற்காக கடும் முயற்சிகள் செய்து வருகிறார். இது தொடர்பாக துருக்கியில் இரு நாட்டு முக்கிய பிரதிநிதிகள் 2 முறை பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் போர்க்கைதிகளை பரிமாறிக் கொண்டார்களே தவிர, சண்டை நிறுத்தம் செய்யவில்லை. மாறாக போர் தீவிரம் அடைந்தது. இரு நாடுகளும் மாறி மாறி சரமாரியாக ஏவுகணை மற்றும் டிரோன் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் போர் தொடங்கியதில் இருந்து இதுவரை இல்லாத அளவில் ரஷியா அதிகப்படியான டிரோன் மற்றும் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி உள்ளதாக உக்ரைன் நேற்று அறிவித்து உள்ளது. உக்ரைனின்முக்கியநகரங்கள்மீதுநீண்டதூரஏவுகணைதாக்குதல்களை ரஷியா முடுக்கிவிட்டிருக்கிறது. முக்கியமாக கீவ் நகரில் நேற்று முன்தினம் இரவு முதல் இடைவிடாமல் தாக்குதல் நடந்தது. வானில் ஏவுகணை, டிரோன் குண்டுவெடிப்புகள் ஒளிர்ந்தபடி இருந்தன.

இரவு முழுவதும் 550 டிரோன்கள் மற்றும் ஏவுகணைகள் ஏவப்பட்டதாக உக்ரைன் கூறி உள்ளது. இதில் 23 பேர் காயம் அடைந்ததாக அறிவித்து உள்ளனர்.

இதுபற்றி உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறும்போது, "சைரன்கள் அலறிக்கொண்டே இருந்ததால் இது ஒரு கடினமான இரவாக அமைந்தது. ரஷிய அதிபர் புதின், அமெரிக்க ஜனாதிபதி டிரம்புடன் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில் தாக்குதல் நிகழ்த்தப்பட்டு உள்ளது. எனவே போரை முடிவுக்கு கொண்டுவரும் எண்ணம் ரஷியாவுக்கு இல்லை என்பது தெளிவாகி உள்ளது" என்றார்.

## இங்கிலாந்தில் மின் கம்பிகள் சேதமடைந்ததால் ரெயில் சேவை பாதிப்பு




லண்டன், ஜூலை 6

இங்கிலாந்தின் பரபரப்பான ரெயில் நிலையங்களுள் ஒன்று நியூ ஸ்ட்ரீட். இங்கிருந்து லண்டன், மான்செஸ்டர் உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்கு ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இதனால் தினமும் ஆயிரக்கணக்கானோர் இந்த ரெயில் நிலையத்துக்கு வந்து செல்கின்றனர். இந்தநிலையில் நியூ ஸ்ட்ரீட் ரெயில் நிலையம் அருகே செல்லும் மின் கம்பி சேதமடைந்தது.

எனவே ரெயிலை இயக்குவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு விரைந்த தொழில்நுட்ப குழுவினர் பழுதான மின் கம்பிகளை சரி செய்தனர். அதன்பிறகே ரெயில் சேவை தொடங்கியது. எனினும் இந்தசம்பவத்தால்லண்டன்,கிளாஸ்கோ,கார்டிப்ஆகியநகரங்களுக்குச் செல்லும் ரெயில்கள் 3 மணி நேரம் தாமதமாக சென்றன. இதனால் பயணிகள் கடும் அவதியடைந்தனர்.

## பிரதமர்மோடிக்குடிரினிடாட்அண்டுடொபாகோ நாட்டின் உயரிய விருது வழங்கி கவுரவிப்பு



போர்ட் ஆப் ஸ்பெயின், ஜூலை 6

பிரதமர் மோடி கானா, டிரினிடாட்அண்டுடொபாகோ, அர்ஜென்டினா,பிரேசில்மற்றும் நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் நேற்று கானாவுக்கு சென்றார். அந்த பயணத்தை முடித்துக்கொண்டு இன்று கரீபியன் தீவு நாடான டிரினிடாட் அண்டு டொபாகோ நாட்டிற்கு பிரதமர் மோடி சென்றார்.

அவர் அந்நாட்டு பிரதமர் கமலா பிரிசத் பிஸ்சரை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இருதரப்பு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

இந்நிலையில், பிரதமர் மோடிக்கு டிரினிடாட் அண்டு டொபாகோ நாட்டின் உயரிய விருதான தி ஆர்டர் ஆப் தி டிரினிடாட் அண்டு டொபாகோகுடியரசுவிருதுவழங்கப்பட்டது.140கோடிஇந்தியர்களின் சார்பாக இந்த விருதை ஏற்றுக்கொள்வதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## படகு கடலில் மூழ்கி விபத்து; 6 பேர் பலி... மாயமான 30 பேரை தேடும் பணி தீவிரம்

ஜகார்தா, ஜூலை 6

இந்தோனேசியாவின் கெட்டபாங் நகரில் உள்ள துறைமுகத்தில் இருந்து புதன்கிழமை இரவு பாலி தீவு நோக்கி சுற்றுலா படகு சென்றுள்ளது. அந்த படகில் 65 பேர் பயணித்தனர்.

பாலி தீவின் அருகே சென்றபோது மோசமான வானிலை காரணமாக அலைகளில் சிக்கி படகு கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து குறித்து அறிந்த மீட்புக்குழுவினர் விரைந்து வந்து மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.


இதில் கடலில் விழுந்து உயிருக்கு போராடிய 29 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆனால், இந்த சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்தனர். அதேவேளை, படகில் பயணித்த மேலும் 30 பேர் கடலில் மூழ்கி மாயமான நிலையில் அவர்களை தேடும் பணியில் கடற்படை கப்பல்கள், ஹெலிகாப்டர்கள் மூலம் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

# மூத்த தமிழறிஞர் வா.மு. சேதுராமன் உடலுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி: முதல்அமைச்சர் உத்தரவு

சென்னை ஜூலை 6

மூத்த தமிழறிஞர் வா.மு. சேதுராமன் வயது மூப்பு காரணமாக சென்னையில் நேற்று காலமானார். அவரது உடலுக்கு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று நேரில் அஞ்சலி செலுத்தினார். இந்த நிலையில் வா.மு சேதுராமன் உடலுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மறைந்த தமிழறிஞரும் கவிஞருமான கலைமாமணி கவிக்கோ வா.மு. சேதுராமன் நேற்று அகவை மூப்பின் காரணமாக இயற்கை எய்தியதை அடுத்து, அன்னாரின் உடலுக்கு முதல்





அமைச்சர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், நூறுக்கும் மேற்பட்ட கவிதை நூல்கள் உள்ளிட்ட படைப்புகளைத் தமிழுலகிற்கு அளித்துள்ளவர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன். மேலும், அவர் தமிழ்நாடு அரசின் கலைமாமணி, திருவள்ளுவர் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

பெருங்கவிக்கோ என்று அனைவராலும் அறியப்பட்ட மூத்த தமிழறிஞர் கலைமாமணி வா.மு. சேதுராமனை கவுரவிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தி நல்லடக்கம் செய்திட முதல்அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை காவல் துறை சார்பாக, பெண்களுக்கு எதிரான குற்றங்கள், சைபர் குற்றங்கள் குறித்து கல்லூரி மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

சென்னை, ஜூலை 6

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண் உத்தரவின் பேரில், சென்னை பெருநகரில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சட்ட உரிமைகள், சட்ட உதவிகள், பாதுகாப்பு அம்சங்கள், சமுதாயத்தில் பெண்களின் பங்கு,தனித்திறன்,சட்டநுணுக்கங்கள் தொடர்பான தகவல்கள் குறித்து விழிப்புணர்வு முகாம்கள், ஊடகங்கள், சமூக வலைதளங்கள் மற்றும் விளம்பரங்கள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தி சமூகத்தில் வன்முறையைக் குறைக்கவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை குறைக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, மத்தியகுற்றப்பிரிவு, கூடுதல் ஆணையாளர் A.ராதிகா அறிவுரையின் பேரில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு துணை ஆணையாளர் G.வனிதா வழிகாட்டுதலின் பேரில் நேற்று (04.07.2025) மாலை, சென்னை, தேனாம்பேட்டை பகுதியில் உள்ள Justice Basheer Ahmed Sayeed College for Women கல்லூரியில் சுமார் 300 மாணவிகளுக்கு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் சைபர் குற்றங்கள் குறித்தும் அவற்றை முன்கூட்டியே அறிந்து தடுப்பது பற்றியும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகரகாவல், வரதட்சணைதடுப்பு பிரிவு (Anti Dowry Cell) உதவி ஆணையாளர் ரித்து சிறப்பு விருந்தினராகவும், குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு (ACTU) ஆய்வாளர் S.மகாலட்சுமி மற்றும் சைபர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் மேனகா ஆகியோர் கலந்து கொண்டு,

பாலியல் தொல்லை, வேலை செய்யும் இடத்தில் பெண்கள் நடந்து கொள்ளும் விதம், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தும், அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வது குறித்தும், பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலில் இருந்து பாதுகாத்து கொள்வது குறித்தும் மற்றும் பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் குறித்தும் விளக்கினர்.

மேலும் கல்லூரி மாணவிகள் அவசர உதவிக்கு காவல் உதவி app பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவது, பெண்களுக்கான உதவி எண்.1091, குழந்தைகளுக்கான உதவி எண்.1098 ஆகிய அவசர அழைப்புகளை பயன்படுத்தி பயனடைவது குறித்தும் விளக்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சுமார் 300 மாணவிகள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் காவல் ஆளிநர்கள் கலந்து கொண்டனர்.

# ச.செல்லம்பட்டு ஊராட்சியில் மது விற்பனை செய்ய தடை ஊராட்சி நிர்வாகம் அதிரடி அறிவிப்பு

கள்ளக்குறிச்சி , ஜூலை 6

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ச.செல்லம்பட்டு கிராமத்தில் மது விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட ஊராட்சி எனவும் பொது இடங்களில் மது அருந்துவது சட்டப்படி குற்றச் செயலாகும் என ஊராட்சி மன்ற தலைவர், மற்றும் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், ஊராட்சி செயலர் ஆகியோர் இணைந்து அந்த கிராமத்தில் விளம்பர தட்டி வைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் அந்த கிராமத்தில் பரபரப்பு ஏற்பட்டாலும் பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.




# பழங்குடியின பெண்களை வரி செலுத்துவோர்களாக உயர்த்திய ஈஷா; வளர்ந்த பாரதத்திற்கு வழிவகுக்கும் முன்னெடுப்பு: பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர் பாராட்டு

கோவை

பழங்குடியின பெண்களை வரி செலுத்துவோர்களாக ஈஷா உயர்த்தியுள்ளது. இது வளர்ந்த பாரதம் என்ற இலக்கை அடைய வழி வகுக்கும் முன்னெடுப்பு என மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் ஜூவல் ஓரம் பாராட்டு தெரிவித்துள்ளார்.

கோவை ஈஷா யோக மையத்திற்கு நேற்று (04.07.2025) மத்திய பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர் ஜூவல் ஓரம் வருகை புரிந்தார். அப்போது, ஈஷாவைச் சுற்றியுள்ள பழங்குடியின மக்களுடன் கலந்துரையாடிய பிறகு அவர் இவ்வாறு கூறினார். ஈஷாவின் வழிகாட்டுதலின் கீழ் 2018ஆம் ஆண்டில், தாணிக்கண்டி பழங்குடியின கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் ஒன்றிணைந்து, நபருக்கு வெறும் 200 ரூபாய் முதலீட்டில் ‘செல்லமாரியம்மன் சுய உதவிக் குழுவை’ உருவாக்கினர். இந்த சுய உதவிக்குழு மூலம் ஆதியோகி வளாகத்தில் சிறிய கடையை அவர்கள் நடத்தத் தொடங்கினர். மிகச்சிறிய முதலீட்டில் துவங்கிய அவர்களின் கடை இன்று 1 கோடிக்கும் மேல் வர்த்தகம் செய்யும் செழிப்பான நிறுவனமாக வளர்ந்துள்ளது. இன்று இந்த பழங்குடியினப் பெண்கள் சுய தொழில்முனைவோர்களாக உருவெடுத்து, பெருமையுடன் வரி செலுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் அளவிற்கு உயர்ந்துள்ளனர். இதனை குறிப்பிட்டே அமைச்சர் ஈஷாவின் பழங்குடியின நலப் பணிகளை பாராட்டினார். மேலும் ஈஷாவின் பிற கிராமப்புற மற்றும் பழங்குடி நலப் பணிகள் குறித்து மிகுந்த ஆர்வத்துடன் கேட்டறிந்த அமைச்சர், ஈஷாவிற்கு



அருகிலுள்ள பழங்குடி கிராமத்திற்கு சென்று கிராம மக்களுடன் உரையாடினார். இதன் பின்பு பேசிய அமைச்சர், “கிராமப்புற மேம்பாடு, கல்வி, சுகாதாரம், ஆன்மீகம் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாத்தல் உள்ளிட்ட ஈஷாவின் பணிகள் பாராட்டத்தக்கவை. இன்று நான் பார்வையிட்ட கிராமத்தின் வளர்ச்சியில், ஈஷா முக்கிய பங்கு வகித்துள்ளது. மேலும் பழங்குடியின மக்கள் ஈஷாவுடன் இணைந்து இருப்பதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஈஷா அறக்கட்டளையின் உதவியால் பழங்குடியினப் பெண்களின் வாழ்வாதாரம் உயர்ந்து, தற்போது வரி செலுத்துகிறார்கள் என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. இதுபோன்ற முன்னெடுப்புகள் வளர்ந்த பாரதம் என்ற இலக்கை அடைய வழிவகுக்கும். மேலும் இது பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சத்குருவின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும்” எனக் கூறினார். ஈஷா அறக்கட்டளை பல ஆண்டுகளாக, அருகிலுள்ள பழங்குடி மற்றும் கிராமப்புற பகுதியில் உள்ள மக்களுக்கு கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார வாய்ப்புகளை வழங்கி வருகிறது. குறிப்பாக இப்பகுதி மாணவர்கள் உயர்கல்வியை தொடர கல்வி உதவித்தொகைகள், அனைத்து மக்களுக்கும் 24 மணி நேரமும் சுகாதார சேவைகள், கழிவு மேலாண்மை, ஊட்டச்சத்து தொகுப்புகள் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு திறன் மேம்பாட்டு பட்டறைகள் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஈஷா செய்து வருகிறது. முன்னதாக அமைச்சர், ஈஷா யோக மையத்தில் சூர்யகுண்டம், லிங்க பைரவி, தியானலிங்கம், ஆதியோகி வளாகங்களில் தரிசனம் செய்தார். இதனுடன் ஈஷா ஹோம் ஸ்கூல் மற்றும் சத்குரு குருகுலம் – ஈஷா சம்ஸ்கிருதி பள்ளிகளையும் அவர் பார்வையிட்டார்.




## ஆம்ஸ்ட்ராங் நினைவிடத்தில் சிலை அமைக்க தமிழ்நாடு அரசு அனுமதி

சென்னை, ஜூலை 6

பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங், கடந்த ஆண்டு ஜூலை 5ந் தேதி சென்னையில் அவரது வீட்டின் அருகே வெட்டி கொலை செய்யப்பட்டார். தமிழ்நாட்டில் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து இதுவரை 27 பேரை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

இதனிடையே, ஆம்ஸ்ட்ராங்கின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நாளை அனுசரிக்கப்படுகிறது. இந்த நிலையில்அவரின்நினைவிடம் அமைந்துள்ள சென்னையை அடுத்த பொத்தூரில் அவருக்கு முழு உருவ சிலை வைக்க காவல்துறையிடம் அனுமதி கோரப்பட்டது. காவல்துறையினர் அனுமதி மறுத்த நிலையில், ஆம்ஸ்ட்ராங்கின் மனைவி பொற்கொடி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.



இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது சிலை வைக்க அனுமதி அளிப்பதாக தமிழ்நாடு அரசு கோர்ட்டில் தெரிவித்தது. மேலும் சிலை வைக்க அனுமதி அளித்து உத்தரவிட்டதாக

திருவள்ளூர் கலெக்டர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து பொற்கொடி தாக்கல் செய்த மனு வாபஸ் பெறப்பட்டது.

## இந்தியா கூட்டணியில் வி.சி.க.வும், காங்கிரசும் நீண்டகாலம் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன செல்வப்பெருந்தகை

சென்னை, ஜூலை 6

தமிழ்நாட்டில் 'இந்தியா' கூட்டணி கட்சிகளில் வி.சி.க.வும், காங்கிரசும் நீண்டகாலம் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன என்று காங்கிரஸ் கமிட்டி மாநில தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாசை கடந்த 29.06.2025 அன்று தைலாபுரத்தில் அவரின் இல்லத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்து, நலன் விசாரித்தேன். பின்னர்பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது, அவரை சந்தித்து நலன் விசாரிக்கவே வந்தேன் என்றும், அதில் எந்த வித அரசியலும் இல்லை என்றும் தெளிவாகக் கூறினேன். மருத்துவர் ராமதாசும் இந்த சந்திப்பு குறித்து பேசும் பொழுது, நலன் விசாரிக்கவே வந்தார் என்றும், இதில் அரசியல் துளியும் இல்லையென்றும் கூறியிருந்தார். இன்று மாலை சில பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் நான் சொல்லாத செய்தியை சொன்னதாக முன்னுக்குப்பின் முரணாக



செய்திகள் வந்துள்ளன.

பா.ம.க. நிறுவனரை கூட்டணிக்கு வாருங்கள் என்று நான் அழைக்கவில்லை. ஆனால், இதை சில அரசியல் கட்சிகளின் இரண்டாம் கட்ட தலைவர்கள் திரித்து பேசி, விவாதப் பொருளாக மாற்றுவதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் 'இந்தியா' கூட்டணி கட்சிகளான தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், சி.பி.எம்,சி.பி.ஐ.,வி.சி.க., தமிழக வாழ்வுரிமைக் கட்சி, இந்திய தேசிய முஸ்லிம் லீக், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஆகியவை இணைந்து வெற்றி கூட்டணியாக எக்கு கோட்டையாக செயல்பட்டு வருகிறது என்று பல இடங்களில் தொடர்ந்து கூறிவருகிறேன்.

ஒரு மூத்த அரசியல் கட்சியின் தலைவரை நேரில் சந்தித்த நிகழ்வை கொச்சைப்படுத்துவதும், விமர்சனம் செய்து அரசியல் ஆக்குவதும் வன்மம் மிகுந்த மனிதாபிமானமற்ற செயலாக நான் கருதுகிறேன். மருத்துவர் ராமதாஸ் உடனான சந்திப்பை அரசியல் ஆக்குவதையும், திரித்து பேசுவதையும், எழுதுவதையும் தவிர்க்க வேண்டுகிறேன். மருத்துவர் ராமதாஸ் உடனான சந்திப்பின்போது, கூட்டணி குறித்து விவாதித்தது போன்றும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு எதிராக காங்கிரஸ் இருப்பது போன்றும் ஒரு பிம்பத்தை எழுப்புவதை உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும்.

அரசியல் களத்தில் மட்டுமின்றி தனிப்பட்ட முறையிலும் நானும், வி.சி.க. தலைவர் திருமாவளவனும் அண்ணன், தம்பியாக பழகி வருகிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 'இந்தியா' கூட்டணியில் புதியதாக ஒரு கட்சியை இணைப்பது குறித்து கூட்டணியின் தலைவரும், தமிழ்நாட்டின் முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின்தான் முடிவு செய்வார்.

இந்திய தேசிய காங்கிரஸ் பேசுவதெல்லாம் எஸ்.சி, எஸ்.டி. ஓ.பி.சி. மைனாரிட்டி ஆகியவர்களின் ஒருங்கிணைப்பைப் பற்றிதான். தலைவர் ராகுல்காந்தியும் இதை வலியுறுத்திதான் பேசிவருகிறார். எந்த இடத்திலும் வன்மமான அரசியலோ, வன்மமான வார்த்தைகளோ காங்கிரஸ் பேரியக்கத்தினர் பேசியது கிடையாது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி 'இந்தியா'கூட்டணியில் உறுதியுடன் தொடர்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் 'இந்தியா' கூட்டணி கட்சிகளில் வி.சி.க.வும், காங்கிரசும் நீண்டகாலம் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. மதவாத சக்திகளை எதிர்த்து போராடுவதில் ஒரணியில் ஒற்றுமையாக நிற்கின்றன. ஆனால், இன்று சில பத்திரிகைகளிலும், சமூகஊடகங்களிலும் 'இந்தியா' கூட்டணியில் குழப்பதை ஏற்படுத்தும் விதமாகவும், ஒற்றுமையை சீர்குலைக்கும் விதமாகவும் செய்திகள் வெளிவந்துள்ளது. ஊடகங்களும், பத்திரிகைகளும் இதுபோன்ற செய்திகளை வெளியிட்டு வரலாற்று பிழை செய்துவிட வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

## திசையன்விளை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நேரடி மாணவர் சேர்க்கை: திருநெல்வேலி கலெக்டர் தகவல்

திருநெல்வேலி ஜூலை 6

திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் சுகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் 202526ம் ஆண்டிற்கான தொழிற்பயிற்சி நிலையம், திசையன்விளையில் மாணவர்கள் நேரடியாக விண்ணப்பிக்கலாம். வெல்டர் பிரிவிற்கு 8ம் வகுப்பிலும், மெக்கானிக் எலக்ட்ரிக் வாகனம், மரைன் பிட்டர், வெஷல் நேவிகேட்டர் போன்ற பிரிவுகளுக்கு 10ம் வகுப்பிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.



மாணவர்கள் தங்களின் மாற்றுச்சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், மொபைல் எண், இமெயில் ஐடி, ஆதார் அட்டை மற்றும் முன்னுரிமை கோரினால் அதற்கானமுன்னுரிமைச் சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகம், தெற்கு இடையன்குடியில் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.750, பாடநூல், சைக்கிள், சீருடை, வரைபடக்கருவி, காலணி, பஸ்பாஸ் மற்றும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் தமிழ் வழியில்பயின்றமாணவ, மாணவிகளுக்கு தமிழ்புதல்வன் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் ஆண் மற்றும் பெண் பயிற்சியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும்.

பயிற்சி முடித்த பின் முன்னணி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்படும். மகளிருக்கு வயது வரம்பு 14 மற்றும் உச்சவரம்பு இல்லை மற்றும் ஆண்களுக்கு வயது வரம்பு 14 முதல் 40 வயது வரை விருப்பமுடையவர்கள் ஊராட்சிமன்ற அலுவலகம், தெற்கு இடையன்குடியில் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

மேலும்விபரங்களுக்கு 8838473273, 9443462242 ஆகிய கைபேசி எண்களை தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சரக்கு வாகனங்கள் திருச்செந்தூர் செல்ல 3 நாட்கள் முற்றிலும் தடை: தூத்துக்குடி காவல்துறை உத்தரவு

தூத்துக்குடி ஜூலை 6

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கும்பாபிஷேகம் 7.7.2025 அன்று காலையில் நடைபெற இருக்கிறது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பக்தர்கள் கூட்டம் அதிகமாக வரக்கூடும். இதனால் திருவிழாவின் முக்கிய நிகழ்வு நாட்களான 6.7.2025, 6.7.2025 மற்றும் 7.7.2025 ஆகிய மூன்று நாட்கள் அத்தியாவசிய பொருட்களை ஏற்றி செல்லும் வாகனங்கள்



தவிர, தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூருக்கும், திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூருக்கும், உவரியிலிருந்து கிழக்கு கடற்கரை சாலை வழியாக திருச்செந்தூருக்கும், சாத்தான்குளத்தில் இருந்து பரமன்குறிச்சி வழியாக திருச்செந்தூருக்கும் மற்றும் திருச்செந்தூர் வழியாக செல்லும் இலகுரக சரக்கு வாகனங்கள் மற்றும் கனரக சரக்கு வாகனங்களும் முற்றிலும் தடைவிதிக்கப்படுகிறது. எனவே திருச்செந்தூர் வருவதை தவிர்த்து மாற்று பாதையில் செல்லவும்.

மேலும் திருச்செந்தூர் கோவிலுக்கு வருபவர்களை தவிர்த்து, ராமேஸ்வரம், தூத்துக்குடி மற்றும் தென் மாவட்டங்களில்இருந்து தூத்துக்குடிக்கு வந்து திருச்செந்தூர் (கிழக்கு கடற்கரை சாலை) வழியாக உவரி மார்க்கமாக கன்னியாகுமரி போன்ற ஊர்களுக்கு செல்லும் தனியார் வாகனங்களும், கன்னியாகுமரி, உவரி, திருச்செந்தூர் (கிழக்கு கடற்கரை சாலை) வழியாகதூத்துக்குடி,ராமேஸ்வரம் மற்றும் தென் மாவட்டங்களுக்கு செல்லும் தனியார் வாகனங்களும் திசையன்விளை/சாத்தான்குளம் ஆகிய ஊர்களில் இருந்து பரமன்குறிச்சி வழியாக திருச்செந்தூரை கடந்து செல்லும் வாகனங்களும் திருச்செந்தூர் (கிழக்கு கடற்கரை சாலை) பாதையை தவிர்த்து வேறு மாற்று பாதையில் செல்லவும். எனவே பொதுமக்கள் அனைவரும் காவல்துறைக்கு முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நெல்லை, தென்காசியில் வீடுகளில் சோலார் பேனல் அமைக்க 7ம்தேதி சிறப்பு முகாம்: மேற்பார்வை பொறியாளர் தகவல்

திருநெல்வேலி ஜூலை 6

திருநெல்வேலி மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அகிலாண்டேஸ்வரி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது வீடுகளின் மேற்கூரைகளின் மேற்பரப்பில் சோலார் பேனல்கள் நிறுவி மின் உற்பத்திசெய்யும்திட்டத்திற்கு, விண்ணப்பிக்கும் முறை, வங்கி கடன் உதவி, வீடுகளில் மேற்கூரையில் சூரிய மின்உற்பத்தி செய்வதற்கு அரசின் மானியங்கள், சோலார் பேனல் மின் உற்பத்தியால் கிடைக்கும் பயன்கள் பற்றிய விரிவான தகவல்களை பெறும் வகையில், தமிழக அரசால் அங்கீகாரம் பெற்ற சோலார் பேனல் நிறுவும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மின்வாரிய அலுவலர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலில் வரும் 7.7.2025 திங்கள்கிழமை



காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இந்த சிறப்பு முகாம் தியாகராஜநகரில் உள்ள திருநெல்வேலி கிராமப்புற கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம், கே.டி.சி. நகரில் உள்ள திருநெல்வேலி நகர்ப்புறக் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம், வள்ளியூர், கல்லிடைக்குறிச்சி, தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய ஊர்களில் உள்ள செயற்பொறியாளர் அலுவலக வளாகத்தில் வைத்து நடைபெற உள்ளது.

எனவே நெல்லை, தென்காசி மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் இச்சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழக வாழ்வுரிமை கட்சி நிர்வாகி வெட்டிக்கொலை; அதிர்ச்சி சம்பவம்

மயிலாடுதுறை ஜூலை 6

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்ட தமிழக வாழ்வுரிமை கட்சி நிர்வாகி மணிமாறன். இவர் இன்று மயிலாடுதுறையில் நடந்த கட்சி உறுப்பினர் சேர்க்கை முகாமில் பங்கேற்று திரும்பியபோது அவரது காரை மர்ம கும்பல் இடைமறித்தது.

மயிலாடுதுறை அருகே செம்பனார்கோவில் அருகே சென்றபோது மணிமாறனின் காரை கும்பல் இடைமறித்து தாக்கியது. இதனால், அந்த கும்பலிடமிருந்து தப்பிக்க மணிமாறன் முயற்சித்துள்ளார்.

காரில் இருந்து தப்பியோட முயற்சித்த மணிமாறனை அந்த கும்பல் அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களால் வெட்டியது. இந்த சம்பவத்தில் மணிமாறன் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் சரிந்து உயிரிழந்தார். மணிமாறனை வெட்டிக்கொன்ற



கும்பல் அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், மணிமாறனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் கொலை செய்துவிட்டு தப்பியோடிய கும்பலை தீவிரமாக தேடி வருகின்றனர். கொலை செய்யப்பட்ட தமிழக வாழ்வுரிமை கட்சி நிர்வாகி மணிமாறன் கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்ற பாமக செயலாளர் தேவமணி கொலை வழக்கில் முதல் குற்றவாளி ஆவார். இதனால் பழிக்கு பழியாக இந்த கொலை நடந்ததா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வேளச்சேரி ரெயில் நிலையத்தில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல் தெற்கு ரெயில்வே அறிவிப்பு



சென்னை ஜூலை 6

வேளச்சேரி புறநகர் ரெயில்நிலையத்தில்உள்ளரங்கு விளையாட்டுத் திடல் அமைக்க உள்ளதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. தெற்கு ரெயில்வேயின் சென்னை கோட்டத்தின் புதியமுயற்சியாகவேளச்சேரிரெயில்நிலையத்தில் இறகுப் பந்து, ஜிம்னாஸ்டிக் என உள்ளரங்கு விளையாட்டு திடல் அமைக்கப்பட உள்ளது.

வருவாய்ஈட்டும்முயற்சியாகவும், மக்களின் ஆரோக்கிய வாழ்க்கை முறையை ஊக்குவிக்கவும்

இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டெண்டர் செயல்முறை IREPS போர்ட்டலில் (http://ireps.gov.in) மின்னணு ஏலம் மூலம் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே வேளச்சேரி முதல் பரங்கிமலை வரை பறக்கும் ரெயில் வருகிற நவம்பரில் மீண்டும் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

## பெண்கள் விடுதிகள், முதியோர் இல்லங்களை பதிவு செய்வதற்கான நடைமுறைகள் மறுசீரமைப்பு

சென்னை, ஜூலை 6

தமிழ்நாட்டிலுள்ள பெண்கள் விடுதிகள் மற்றும் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றை பதிவு செய்வதற்கான நடைமுறைகள் மறுசீரமைக்கப்பட்டு எளிய ஆளுமையின் கீழ் இந்த செயல்முறையை எளிதாக்குவதற்காக தமிழ்நாடு இசேவை இணைய முகப்பில் ஒரு பிரத்யேக சேவை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இசேவை இணைய முகப்பின் (https://www.tnesevai.tn.gov.in/) மூலம் பின்வரும் சேவைகள்தற்போது இணைய வழியில் வெளியிடப்பட்டுள்ளன.




· முதியோர் இல்லங்களைப் பதிவு செய்தல்.

· பெண்களுக்கான இல்லங்கள் பதிவு மற்றும் உரிமம் வழங்குதல்.

· பணிபுரியும் மகளிர் விடுதிக்கான உரிமம் வழங்குதல்.

சமூக நலத்துறையின் கீழ் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், தங்களுடைய உரிமங்கள் காலாவதியாகும் போது புதிய இணையதள நடைமுறையைப் பயன்படுத்தி தங்கள் உரிமத்தைப் புதுப்பித்துக் கொள்ளலாம். உரிமம் பெற்ற அனைத்து நிறுவனங்களும் கீழ்காணும் நடைமுறையை பின்பற்ற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

· https://www.tnesevai.tn.gov.in/ என்ற இணைய தளத்தில் தமிழ்நாடு இசேவை இணைய முகப்பை பார்வையிட வேண்டும்.

· தங்கள் பதிவுகளை புதுப்பிக்க வேண்டும்.

· தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

உரிமங்கள் மற்றும் பதிவுகள் தேவைப்படும் விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பிக்கும் வசதியினை பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## நினைத்தது ஒன்று.. நடந்தது ஒன்று.. திருநின்றவூர் பெண் கவுன்சிலர் கொலையின் பின்னணி

திருவள்ளூர் ஜூலை 6

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அடுத்த திருநின்றவூரை சேர்ந்தவர் ஸ்டீபன் ராஜ் (வயது 32). இவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திருநின்றவூர் நகர செயலாளராக உள்ளார். இவரது மனைவி கோமதி (28) திருநின்றவூர் நகராட்சியின் 26 வது வார்டு கவுன்சிலராக இருந்து வந்தார். இவர்களுக்கு தேவேஷ் (9), அம்பேத் என்ற தேசிங் (7), யாழினி ஜெயா (5),



பிரணவ் (ஒன்றரை வயது) என 4 குழந்தைகள் உள்ளனர்.

இந்த நிலையில், கோமதிக்கு இன்ஸ்டாகிராம் மூலம் ஆண் ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அவரும் திருநின்றவூர் பகுதியை சேர்ந்தவர்தான். மனைவியின் பழக்கத்தை கண்டுபிடித்த ஸ்டீபன்ராஜ் அவரை கண்டித்துள்ளார்.

இதற்கிடையே, கடந்த சில நாட்களுக்கு முன்பு ஸ்டீபன் ராஜின் தம்பி அஜித், கோமதியின் செல்போனை தற்செயலாக எடுத்து பார்த்துள்ளார். அப்பொழுது கோமதி ஆண் நண்பருடன் சேர்ந்து எடுத்த போட்டோ அதில் இருந்துள்ளது. இதனால், அதிர்ச்சி அடைந்த அவர், அண்ணன் ஸ்டீபன்ராஜிடம் அதை காண்பித்துள்ளார்.

போட்டோவை பார்த்து ஆத்திரம் அடைந்த ஸ்டீபன் ராஜ், கோமதியிடம் சண்டை போட்டுள்ளார். நேற்று இரவோடு இரவாக கோமதியை அதே தெருவில் உள்ள அவரது சித்தி வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு, அவரிடம் கோமதிக்கும், ஆண் நண்பருக்கும் உள்ள பழக்கத்தை கூறி, புத்திமதி சொல்லுமாறு கூறியுள்ளார். பிறகு, அங்கிருந்து அவர் சென்ற நிலையில், கோமதி சற்று நேரத்தில் வீட்டை விட்டு வெளியேறினார்.

இதை தற்செயலாக பார்த்து அதிர்ச்சி அடைந்த ஸ்டீபன் ராஜ், தனது தம்பி அஜித்திடம், "கோமதி கோபித்துக் கொண்டு போகிறாள். எங்கேயாவது போய் ரெயிலில் முன் பாய்ந்து தற்கொலை செய்துவிடக்கூடாது" என கூறி, அவரை பின்தொடர கூறியுள்ளார்.

உடனடியாக, அஜித்தும் உறவினர் ஜான்சனுடன் மோட்டார் சைக்கிளில் கோமதியின் பின்னால் ரகசியமாக சென்றனர். ஷேர் ஆட்டோவில் சென்ற கோமதி, ஆவடி செக்போஸ்ட் அருகே இறங்கினார். அங்கே இன்ஸ்டாகிராம் மூலம் பழகி வந்த ஆண்நபர் தனது நண்பர்களுடன் காரில் நின்று கொண்டிருந்தார்.

அவர்களிடம் கோமதி சென்றபோது, அஜித்தும் அங்கு சென்று அவரது ஆண் நண்பரிடம் வாக்குவாதம் செய்தார். மேலும், இது குறித்து தனது அண்ணன் ஸ்டீபன் ராஜிடமும் தகவல் தெரிவித்தார்.

இதனால், ஆத்திரத்தின் உச்சத்திற்கே சென்ற ஸ்டீபன் ராஜ் மோட்டார் சைக்கிளில் அங்கு விரைந்தார். ஆனால், அதற்குள் மனைவியின் ஆண் நண்பர், அவருடைய சகாக்களுடன் அங்கிருந்து காரில் தப்பிச்சென்றுவிட்டார்.

இதனால், மனைவியை ஷேர் ஆட்டோவில் அழைத்துக் கொண்டு ஸ்டீபன் ராஜ் வீடு திரும்பினார். அவருடைய மோட்டார் சைக்கிளை ஜான்சன் ஓட்டிவந்தார்.

ஆட்டோவில் வைத்தே மனைவி கோமதியிடம், நமக்கு 4 பிள்ளைகள் இருக்கின்றன. இதுபோன்று நடந்துகொள்ளாதே என்று ஸ்டீபன் ராஜ் கூறியுள்ளார். ஆனால், அதற்கு செவி சாய்க்காத கோமதி, திருநின்றவூர் வந்து இறங்கியதும், வீட்டிற்கு செல்லாமல், ரெயில்வே சுரங்கப்பாதை நோக்கி சென்றுள்ளார்.

இதனால், ஆத்திரத்தில் ஸ்டீபன்ராஜ் தான் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து கோமதியை தலை, முதுகு, கை, கழுத்து உள்ளிட்ட பகுதிகளில் சரமாரியாக வெட்டினார். இதில், ரத்த வெள்ளத்தில் கீழே சாய்ந்த கோமதி, துடிதுடித்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவல் கிடைத்ததும் திருநின்றவூர் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று கோமதியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், தப்பியோடிய அவரது கணவர் ஸ்டீபன்ராஜ், அஜித், ஜான்சன் ஆகியோரை தேடி வந்தனர். இன்று காலை அவர்கள் 3 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும், கோமதியின் ஆண் நண்பரையும் போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# கோத்தகிரி-மேட்டுப்பாளையம் சாலையில் காட்டு யானைகள் முகாம்: வாகன ஓட்டிகளுக்கு எச்சரிக்கை




நீலகிரி, ஜூலை 6

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே உள்ள குஞ்சப்பனை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தற்போது பலாப்பழ சீசன் தொடங்கி உள்ளது. இதனால் பலா பழங்களை உண்பதற்காக சமவெளி பகுதிகளில் இருந்து காட்டு யானைகள் கூட்டம், கூட்டமாக இப்பகுதிக்கு படையெடுத்து வருகின்றன. இவ்வாறு வந்துள்ள காட்டு யானைகள் கோத்தகிரி மேட்டுப்பாளையம் சாலையில் அவ்வப்போது உலா வந்த வண்ணம் உள்ளன. இந்த சாலை வழியாக செல்லும் வாகனங்களை துரத்துவதும், சேதப்படுத்துவதும் வாடிக்கையாகி வருகிறது.

இந்தநிலையில் மாமரம்பகுதியில்குட்டியுடன் 4 காட்டு யானைகள் கடந்த சில நாட்களாக முகாமிட்டு உள்ளன. எனவே, அந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் எச்சரிக்கையாகவும், பாதுகாப்பாகவும் வாகனத்தை இயக்க வேண்டும் என வனத்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.

# இன்ஸ்டாகிராமில் காதல்: இளம்பெண்ணை கர்ப்பமாக்கிய வாலிபர் கைது




சென்னை, ஜூலை 6

ஈரோடு மாவட்டத்தை சேர்ந்தவர் 25 வயது மதிக்கத்தக்க திருமணமான இளம் பெண் ஒருவர் தனது கணவரிடம் விவாகரத்து பெற்று செங்கல்பட்டு மாவட்டம் சிங்கப்பெருமாள் கோவில் பகுதியில் தங்கி அதே பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். அவருக்கு அரக்கோணத்தை சேர்ந்த ராகுல் (21) என்பவருடன் இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம் ஏற்பட்டது. ராகுல் ஒரகடம் பகுதியில் தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்தார்.

அடிக்கடி தனிமையில் சந்தித்து பழகி வந்தார். இதில் அந்த பெண் கர்ப்பம் அடைந்தார். இதையடுத்து அந்த பெண் தன்னை திருமணம் செய்து கொள்ளும்படி ராகுலை வற்புறுத்தி வந்தார். அதற்கு ராகுல் கர்ப்பத்தை கலைத்து விடு. அதன் பிறகு திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூறி மருந்து கடையில் மாத்திரை வாங்கி கொடுத்தார். மாத்திரையை சாப்பிட்ட அந்த பெண்ணின் கர்ப்பம் கலைந்து திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டு செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து அந்த பெண் மறைமலைநகர் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து ராகுலை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஆனித்திருவிழா தேரோட்டம்: நெல்லையில் போக்குவரத்து மாற்றம்

நெல்லை, ஜூலை 6

நெல்லையப்பர் கோவில் ஆனித்திருவிழா தேரோட்டத்தை முன்னிட்டு, நெல்லையில் அன்றைய தினம் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து நெல்லை மாநகர துணை போலீஸ் கமிஷனர் பிரசன்னகுமார் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:

நெல்லையப்பர் கோவில் ஆனித்திருவிழா தேரோட்டம் வருகிற 8ந்தேதி நடக்கிறது. இதனை முன்னிட்டு அன்று நெல்லை மாநகரத்தில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நெல்லை மாநகராட்சி பொருட்காட்சி திடலில் உள்ள தற்காலிக பஸ் நிறுத்ததில் பயணிகளை இறக்கி விட்டு மீண்டும் அங்கிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு சந்திப்பு பஸ் நிலையம் வழியாக செல்ல வேண்டும்.

நெல்லை சந்திப்பு பஸ் நிலையத்தில் இருந்து டவுன் வழியாக மானூர் மார்க்கம் செல்லும் வாகனங்கள், ஸ்ரீபுரம், ஆர்ச் வந்து இடதுபுறம் திரும்பி நெல்லை கண்ணன் ரோடு வழியாக அருணகிரி தியேட்டர், தெற்கு மவுன்ட் ரோடு, வழுக்கோடை சந்திப்பு வந்து இடதுபுறம் திரும்பி லாலுகாபுரம், கண்டியப்பேரி, ராமையன்பட்டி சாலை சந்திப்பு, ராமையன்பட்டி விலக்கு வழியாக செல்ல வேண்டும்.

மானூர், ஆலங்குளம் மார்க்கம்

மானூர் மார்க்கத்தில் இருந்து நெல்லை டவுன் வழியாக சந்திப்பு பஸ் நிலையம் செல்ல வேண்டிய வாகனங்கள், பஸ்கள் ராமையன்பட்டி விலக்கு, குருநாதன் கோவில் சந்திப்பு, புதுப்பாலம், தச்சநல்லூர் பஜார் வழியாக ராம் தியேட்டர் சந்திப்பு வந்து வண்ணார்பேட்டை மற்றும் சந்திப்பு பகுதிக்கு செல்ல வேண்டும்.

புதிய பஸ்நிலையத்திலிருந்து ஆலங்குளம் மார்க்கமாக தென்காசி, செங்கோட்டை வரை செல்லும் வாகனங்கள், புறநகர் மற்றும் நகர பேருந்துகள் அனைத்தும் ஸ்ரீபுரம், டவுன் ஆர்ச் வந்து இடதுபுறம் திரும்பி நெல்லை கண்ணன் சாலை வழியாக அருணகிரி தியேட்டர், தெற்கு மவுன்ட் ரோடு வழியாக காட்சி மண்டபம் வந்து வழுக்கோடை வழியாக செல்ல வேண்டும்.

தென்காசி மார்க்கம்

தென்காசி மார்க்கத்திலிருந்து புதிய பஸ்நிலையம் வரும் பஸ்கள் பழைய பேட்டை கண்டியபேரி சாலை வழியாக ராமையன்பட்டி சாலை சந்திப்பு வந்து இடதுபுறம் திரும்பி ராமையன்பட்டி விலக்கு, சத்திரபுதுக்குளம், சங்கரன்கோவில் ரோடு, தச்சநல்லூர் வடக்கு புறவழிச்சாலை, வண்ணார்பேட்டை வழியாக புதிய பஸ் நிலையம் செல்ல வேண்டும்.

தென்காசி மார்க்கத்திலிருந்து நெல்லை சந்திப்பு வரும் நகரபஸ்கள் பழைய பேட்டை, கண்டியபேரி சாலை வழியாக ராமையன்பட்டி சாலை சந்திப்பு வந்து வலதுபுறமாக திரும்பி குருநாதன் கோவில் சந்திப்பு, புதுப்பாலம், தச்சநல்லூர் பஜார் வழியாக ராம்தியேட்டர், சந்திப்பு வந்து வண்ணார் பேட்டை மற்றும் சந்திப்பு பகுதிக்கு செல்ல வேண்டும்.

அம்பை, பாபநாசம்

புதிய பஸ்நிலையத்தில் இருந்து சேரன்மாதேவி மார்க்கமாக அம்பை, பாபநாசம் வரை செல்லும் வாகனங்கள், பஸ் அனைத்தும் ஸ்ரீபுரம், டவுன் ஆர்ச் வந்து இடதுபுறம் திரும்பி நெல்லைகண்ணன்ரோடு, வழியாக அருணகிரி தியேட்டர், தெற்கு மவுன்ட் ரோடு வழியாக காட்சி மண்டபம் வந்து பேட்டை வழியாக செல்ல வேண்டும்.

பாபநாசம், சேரன்மகாதேவி மார்க்கத்திலிருந்து டவுண் வழியாக புதிய பஸ்நிலையம் செல்லும் வாகனங்கள் மற்றும் புறநகர் பஸ்கள் பேட்டை, கோடீஸ்வரன்நகர், வலுக்கோடை சந்திப்பு வந்து

இடதுபுறம் திரும்பி லாலுகாபுரம், கண்டியபேரி சாலை வழியாக ராமையன்பட்டி சாலை சந்திப்பு வந்து இடதுபுறம் திரும்பி ராமையன்பட்டி விலக்கு, சத்திரபுதுக்குளம் சங்கரன்கோவில் ரோடு, தச்சநல்லூர் வடக்கு புறவழிச்சாலை வண்ணார் பேட்டை வழியாக புதிய பஸ்நிலையம் செல்ல வேண்டும்.

சேரன்மகாதேவி மார்க்கத்திலிருந்து டவுன் வழியாக சந்திப்பு பஸ் நிலையம் செல்லும் நகர பஸ்கள் பேட்டை, கோடீஸ்வரன் நகர், வழுக்கோடை சந்திப்பு வந்து இடதுபுறம் திரும்பி லாலுகாபுரம், கண்டியபேரி சாலை வழியாக ராமையன்பட்டி சாலை சந்திப்பு வந்து வலதுபுறமாக திரும்பி குருநாதன் கோவில் விலக்கு, புதுப்பாலம், தச்சநல்லூர் பஜார் வழியாக ராம்தியேட்டர், சந்திப்பு வந்து வண்ணார்பேட்டை மற்றும் சந்திப்பு பகுதிக்கு செல்ல வேண்டும்.

அவசரகால வாகனங்கள்

டவுன்பகுதிக்குள்வரும் தீயணைப்பு வாகனம், ஆம்புலன்ஸ் வாகனம், மற்றும் மீட்பு அவசரகால வாகனங்கள் அனைத்தும் சொக்கப்பனை கார்னர், சத்தியமூர்த்தி தெரு, வ.உ.சி தெரு, மற்றும் குளப்பிறை தெரு வழியை அவசர வழியாக பயன்படுத்தி கொள்ளலாம்.

மேலும் பாபநாசம் மற்றும் தென்காசி மார்க்கத்தில் இருந்து வரும் அவசரகால வாகனங்கள் அனைத்தும் வழுக்கோடை சந்திப்பு, தொண்டர்சன்னதி, புட்டார்த்தி அம்மன் கோவில் சந்திப்பு, வடக்கு மவுண்ட் சாலை டவுன் ஆர்ச் வழியை அவசர வழியாக பயன்படுத்தி கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பேராசிரியர் காதர் மொய்தீனுக்கு தகைசால் தமிழர் விருது தமிழக அரசு அறிவிப்பு



சென்னை, ஜூலை 6

தமிழ்நாட்டுக்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர்களை பெருமைப்படுத்தும் வகையில் தகைசால் தமிழர் என்ற விருதை உருவாக்கவும், இந்த விருதுக்கான விருதாளரை தேர்வு செய்ய ஒரு குழுவை அமைக்கவும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 2021ல் ஆணையிட்டார். இந்த விருது கடந்த 4 ஆண்டுகளில் கம்யூனிஸ்டு கட்சி தலைவர்கள் சங்கரய்யா, ஆர்.நல்லகண்ணு, திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி மற்றும் காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் குமரி அனந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதுக்கான நடப்பாண்டு விருதாளரை தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில், மூத்த அரசியல் தலைவரும், கருணாநிதியின் அன்புக்குரியவருமான, மணிச்சுடர் இதழின் ஆசிரியரும், இந்திய அரசியல் பற்றிய ஆழமான புரிதலுடன், சமூக நல்லிணக்கத்துக்காக தன் வாழ்நாளெல்லாம் உழைத்து வரும்,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீனை பெருமைப்படுத்தும் வகையில் இந்த ஆண்டுக்கான தகைசால் தமிழர் விருது வழங்க முடிவு செய்யப்பட்டது.

இவர் அறிவார்ந்த சொற்பொழிவாளர், கோவையில் 2010ம் ஆண்டு நடைபெற்ற உலக தமிழ் செம்மொழி மாநாட்டில் தமிழ்நாட்டுக்கும், அரபு நாடுகளுக்கும் உள்ள தொடர்புகள் பற்றிய ஆய்வுக் கட்டுரை வழங்கியவர்.

8 ஆண்டுகள் தொடர்ந்து தாருல் குர்ஆன் இதழில் 'தமிழருக்கு இஸ்லாம் வந்த மதமா? சொந்த மதமா?' எனும் தலைப்பில் தொடர் கட்டுரையை எழுதியவர். வாழும் நெறி, குர்ஆனின் குரல், இஸ்லாமிய இறைக் கோட்பாடு உள்பட 6 புத்தகங்களை எழுதியவர்.

மேலும் அவர் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் 15 ஆண்டுகள் வரலாற்றுத்துறை பேராசிரியராக பணியாற்றியவர்.

கண்ணிய தென்றல் காயிதே மில்லத் காலம் முதல் தொடர்ந்து சமூக நல்லிணக்கம் பரப்பி வரும் சிந்தனையாளர், பல நூறு பட்டதாரிகளை உருவாக்கி அவர்களின் வாழ்வினை உயரத்துக்கு உயர்த்திய ஆசானும் ஆவார்.

'தகைசால் தமிழர் விருது'க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காதர் மொய்தீனுக்கு, ரூ.10 லட்சத்துக்கான காசோலையும், பாராட்டு சான்றிதழும் வருகிற ஆகஸ்டு மாதம் 15ந்தேதியன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் மு.க.ஸ்டாலினால் வழங்கப்பட உள்ளது.

# திருச்செந்தூரில் கடல் 50 அடி தூரம் உள்வாங்கியது



திருச்செந்தூர், ஜூலை 6

முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் அவ்வப்போது கடல் உள்வாங்குவது வழக்கம். அமாவாசை பௌர்ணமி நாட்களில் அதிக தூரத்திற்கு கடல் உள்வாங்கும். இந்நிலையில் இன்று திருச்செந்தூர் கடற்கரையில் அய்யா கோவில் அருகே சுமார் 50 அடி நீளத்திற்கு கடல் உள்வாங்கியுள்ளது.

இதனால் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தென்படுகிறது. இந்த பாறைகள் மீது பக்தர்கள் ஏறி நின்று செல்பி எடுத்து மகிழ்ந்தனர். மேலும் பாறைகளின் இடுக்கிற்குள் தேங்கிய கடல்நீரில் இருக்கும் சிறிய மீன்களை சுவாமி தரிசனம் செய்ய வந்த பக்தர்கள் தங்களது குழந்தைகளுடன் மீன்கள் பிடித்து மகிழ்ந்தனர்.

# போலீசாரின் புலன் விசாரணையில் மாற்றம் வேண்டும்

சென்னை, ஜூலை 6

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் போலீஸ் நிலையத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த தந்தை, மகன் மரணத்தின் வடுக்கள் கூட இன்னும் மாறாத நிலையில் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் போலீசார் விசாரணையில் அஜித்குமார் என்ற 28 வயது கோவில் காவலாளி அடித்து கொல்லப்பட்டார். அவர் அங்குள்ள பத்ரகாளியம்மன் கோவிலில் ஒப்பந்த காவலாளியாக பணிபுரிந்தார். அங்கு சாமி கும்பிட வந்த திருமங்கலத்தை சேர்ந்த நிகிதா என்ற பெண் தன்னுடைய நகை, பணத்தை காணவில்லை என்று போலீசில் புகார் அளித்தார்.

இதன் தொடர்ச்சியாக அஜித்குமாரை போலீசார் பிடித்து விசாரணைக்காக அழைத்து சென்று கொடூரமாக தாக்கியதால் உடலில் 44 காயங்கள் ஏற்பட்டு உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பாக 5 போலீசார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கும் சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கிடையில் கூடுதல் போலீஸ் டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசீர்வாதம் வீடியோ கான்பிரன்ஸ் மூலம் அனைத்து போலீஸ் அதிகாரிகளிடமும் பேசி, எதிர்காலத்தில் இப்படி ஒரு சம்பவம் நடைபெறாமல் இருக்க பல அறிவுறுத்தல்களை வழங்கினார்.

காவல் நிலையத்தில் யாரும் புகார் அளிக்க வந்தால், உடனடியாக எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்படவேண்டும் அல்லது சி.எஸ்.ஆர். என்ற ஒப்புகை சீட்டை கொடுக்கவேண்டும். விசாரணை கைதிகளை துன்புறுத்தக்கூடாது. தேவை இல்லாமல் போலீஸ் காவலில் வைக்கக்கூடாது. ஒருவரை 3, 4 போலீஸ்காரர்கள் ஒன்றாக சேர்ந்து விசாரிக்கக்கூடாது. போலீஸ் காவலில் மரணம் இருக்கவே கூடாது. லத்திகளை பயன்படுத்தக்கூடாது. போலீஸ்காரர்கள் கட்டப்பஞ்சாயத்துகளில் ஈடுபடக்கூடாது. குற்றவழக்குகள் விசாரணையில் நல்ல முன் அனுபவம் உள்ள திறமைவாய்ந்த போலீஸ்காரர்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பது போன்ற உத்தரவுகளை அடுக்கடுக்காக பிறப்பித்துள்ளார். இதுமட்டுமல்லாமல் இப்போதுள்ள புலன் விசாரணை மாற்றப்பட்டு அறிவியல் பூர்வமான விசாரணை நடத்த போலீசாருக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு கியூ பிரிவு போலீஸ் சூப்பிரண்டு, ஒரு பயங்கரவாதியிடம் நடத்திய புலன் விசாரணை இன்றளவும் பேசப்படுகிறது. பயங்கரவாதியிடம் அவர் தினமும் இரவு 8 மணிக்கு சென்று பிரியாணி, டீ எல்லாம் வாங்கிக்கொடுத்து அதிகாலை 5 மணி வரை நட்பு ரீதியாக பேசி, அதற்கு பிறகுதான் தூங்கவிடும் விசாரணையை தொடர்ச்சியாக நடத்தினார். 5 நாட்களுக்கு பிறகு அந்த பயங்கரவாதி தானாகவே வெடிகுண்டுகள் சென்னை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு படகில் வைத்திருந்ததை சொல்லிவிட்டான். ஒரு அடி கூட அடிக்காமல் விசாரணை நடத்திய அந்த பாங்கை இது போன்ற விசாரணைகளில் போலீஸ்காரர்கள் பின்பற்ற வேண்டும். மேலும் அனைத்து போலீஸ்காரர்களின் அணுகுமுறையில் மாற்றம் கொண்டுவர பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

இதுபோல அத்துமீறல்களோடு சமீபகாலங்களாக நடக்கும் என்கவுண்ட்டர்களையும் போலீசார் தவிர்க்க வேண்டும். அடிக்காமல், உதைக்காமல், என்கவுண்ட்டர் செய்யாமல் புலன் விசாரணை செய்வதில்தான் திறமை இருக்கிறது என்பதை தமிழக காவல் துறையினர் அனைவருக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் காவல் நிலைய மரணங்களுக்காக தமிழ்நாட்டில் ஒரு வழக்கை தவிர மற்ற வழக்குகளில் போலீசார் தண்டிக்கப்படவில்லை என்பதையும் புறந்தள்ளிவிடமுடியாது. ஆக தொடக்கத்தில் பரபரப்பாக பேசப்படும் இது போன்ற வழக்குகள் நாளடைவில் நீர்த்துபோய்விடுகிறது. அதுபோன்ற நிலை இனி மேலும் இருக்கக்கூடாது. சாத்தான்குளம், திருப்புவனம் காவல் விசாரணை சம்பவங்களில் கைது செய்யப்பட்ட காவலர்களின் வாழ்க்கையே போய் விட்டது. இனி ஒருபோதும் அவர்கள் காக்கி சட்டை அணியமுடியாது. இதையெல்லாம் அனைத்து காவல்துறையினரும் உணர வேண்டும்.

# மெரினாவில் மாற்றுத்திறனாளிகள் மரப்பாதை மறுசீரமைப்பு

சென்னை, ஜூலை 6

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ், மெரினா கடற்கரையில் கடந்த 2022ம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான மரப்பாதை திறக்கப்பட்டது. கடல் அழகை அருகில் சென்று ரசிக்கும் வகையில் மரப்பாதை அமைக்கப்பட்டது. இந்த மரப்பாதையை ஏராளமான மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தி வந்தனர். இந்த நிலையில், சமீபத்தில் மரப்பாதை சேதம் அடைந்து மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. எனவே, மரப்பாதையை சீரமைத்து தர வேண்டுமென மாற்றுத்திறனாளிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, மரப்பாதையை சீரமைக்கும் பணியை மாநகராட்சி அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். மரப்பாதையின் கைப்பிடிகள், உடைந்த பலகைகள் உள்ளிட்டவைகளை அகற்றிவிட்டு புதிதாக பலகைகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்த நிலையில், சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ்குமார், மரப்பாதை சீரமைப்பு பணிகளை நேரில் ஆய்வு செய்தார். அப்போது, பணிகளை விரைவில் முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இதைத்தொடர்ந்து, மெரினாவில் நீலக்கொடி கடற்கரை மேம்பாட்டு பணிகளை பார்வையிட்டார். ஆய்வின்போது, மண்டலக்குழு தலைவர் மதன்மோகன், கவுன்சிலர் மங்கை, சிறப்பு திட்டங்கள்துறை அலுவலர் சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ஒரே ஆண்டில் 17 ஆயிரத்து 702 பேருக்கு அரசு வேலை டி.என்.பி.எஸ்.சி. தகவல்




சென்னை, ஜூலை 6

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் செயலாளர் கோபால சுந்தரராஜ் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

அரசு பணியை எதிர் நோக்கி இருக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் விதமாக, டி.என்.பி.எஸ்.சி. மூலம் 17 ஆயிரத்து 595 காலிப்பணியிடங்கள் 2026 ஜனவரி மாதத்திற்குள் நிரப்பப்படும் என்று தமிழக அரசு கடந்த ஆண்டு ஜூன் மாதம் சட்டமன்றத்தில் அறிவித்தது.

தேர்வர்களின் நலன் கருதி, டி.என்.பி.எஸ்.சி., தேர்வு பணிகளை துரிதப்படுத்தி, கடந்த 2024 ஜூன் முதல் நடப்பாண்டு ஜூன் மாதம் வரையில் பல்வேறு அரசு துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப 17 ஆயிரத்து 702 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதாவது, 2026 ஜனவரி மாதம் வரை நிர்ணயித்த இலக்கை டி.என்.பி.எஸ்.சி. 7 மாதங்களுக்கு முன்பாகவே எட்டியுள்ளது. மேலும், தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு கூடுதலாக 2 ஆயிரத்து 500க்கும் அதிகமான காலிப்பணியிடங்களை நிரப்ப தேர்வு பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஈரோடுஜோலார்பேட்டை ரெயில் சேவையில் மாற்றம்



சேலம், ஜூலை 6

சேலம் தெற்கு கோட்ட ரெயில்வே மக்கள் தொடர்பு துறை அதிகாரி மரியா மைக்கேல் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஜோலார்பேட்டையில் உள்கட்டமைப்பு பராமரிப்பு பணிகளை மேம்படுத்த பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் ஈரோடு ஜோலார்பேட்டை செல்லும் ரெயில் (வண்டி எண்56108) நாளை மறுநாள் (திங்கட்கிழமை) முதல் வருகிற 10ந் தேதி (வியாழக்கிழமை) வரை 4 நாட்கள் திருப்பத்தூர் மற்றும் ஜோலார்பேட்டை இடையே பகுதியளவு ரத்து செய்யப்படுகிறது. இந்த நாட்களில் ஈரோட்டில் இருந்து திருப்பத்தூர் வரை மட்டுமே இயக்கப்படும்.

ஜோலார்பேட்டை ஈரோடு செல்லும் ரெயில் (வண்டி எண்56107) நாளை மறுநாள் முதல் 10ந் தேதி வரை ஜோலார்பேட்டை,திருப்பத்தூர்இடையே பகுதியளவு ரத்து செய்யப்படும். திருப்பத்தூரில் இருந்து புறப்பட்டு ஈரோடு வரை மட்டுமே இயக்கப்படும்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

# பெண்ணை கொலை செய்து புதைத்த 2 பேருக்கு ஆயுள் தண்டனை

தூத்துக்குடி ஜூலை 6

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினம், முத்துகிருஷ்ணாபுரம் பகுதியில் வைத்து, கடந்த 2014ம் ஆண்டு வாழவல்லான் கொற்கைரோடு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கொலை செய்து புதைக்கப்பட்டார்.

இந்த வழக்கில் முத்துகிருஷ்ணாபுரம் வடக்குத் தெருவைச்சேர்ந்த தனராஜ் மகன் சோமு(எ) சோமசுந்தரம் (வயது 45) மற்றும் மாநாடு தைக்காவூர் பகுதியைச் சேர்ந்த வெற்றிவேல் மகன் அருண்குமார்(35) ஆகிய 2 பேரை குலசேகரன்பட்டினம் காவல் நிலைய போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம்II ல் நடைபெற்று வந்தது. இந்த வழக்கைவிசாரித்தநீதிபதி பீரித்தாஇன்றுகுற்றவாளிகளான சோமு(எ) சோமசுந்தரம் மற்றும் அருண்குமார் ஆகிய 2 பேருக்கும் தலா ஆயுள் தண்டனை மற்றும் ரூ.6 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய குலசேகரன்பட்டினம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் அண்ணாதுரை, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசுதரப்பு வழக்கறிஞர் சேவியர் ஞானப்பிரகாசம், விசாரணைக்கு உதவியாக இருந்த ஏட்டு முருகன் ஆகியோரை தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் பாராட்டினார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

6.7.2025

## 8 மணி நேரத்துக்கு முன்னரே இருக்கை பற்றி அறிந்து கொள்ள சார்ட் லிஸ்ட் நடைமுறை முதல் அமல்




சென்னை: 8 மணி நேரத்துக்கு முன்னரே இருக்கை பற்றி அறிந்து கொள்ள சார்ட் லிஸ்ட் நடைமுறை இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது. காலை 5 மணி முதல் பிற்பகல் 2வரை புறப்படும் ரயில்களுக்கு சார்ட் லிஸ்ட் முந்தைய நாள் இரவு 9மணிக்கு தயாராகும். பிற்பகல் 2 மணி முதல் மறுநாள் அதிகாலை 5 மணி வரை புறப்படும் ரயில்களுக்கு 8 மணி நேரம் முன்பு அட்டவணை தயாரிக்கப்படும். இறுதி அட்டவணை ரயில் புறப்படுவதற்கு 30 நிமிடங்களுக்குமுன்புஇறுதிசெய்யப்படும் என ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது

## கொடைக்கானலில் தனியார் தோட்டத்தில் தீ விபத்து



நீலகிரி: கொடைக்கானல் அருகே அடுக்கம் பகுதியில் தனியார் தோட்டத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வனப்பகுதியில் தீ பரவாமல் தடுக்க, தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## பேருந்து டயர் வெடித்து விபத்து: 2பேர் உயிரிழப்பு




காரைக்குடி, ஜூலை 6

காரைக்குடி அருகே தனியார் பேருந்து டயர் வெடித்து எதிரே வந்த பைக் மீது மோதியதில் 2 பேர் உயிரிழந்தனர். பேருந்து மோதியதில் இருசக்கர வாகனத்தில்சென்றமணிகண்டன் (36), விஜயகுமார் (33) பலியாகினர்.

## சேலத்தில் டிக்கெட் இல்லாமல் பயணித்தவர்களிடம் ரூ6.18 கோடி வசூல்



சேலம், ஜூலை 6

3 மாதத்தில் டிக்கெட் இல்லாமல் ரயிலில் பயணித்தவர்களிடம் இருந்து ரூ.6.18 கோடி அபராதம் வசூல் செய்யப்பட்டுள்ளது. டிக்கெட் இல்லாமல், முறைகேடாக பயணித்த 84,000 பயணிகளிடம் இருந்து ரூ.6.18 கோடி அபராதம் வசூல் செய்யப்பட்டது.

## பெட்ரோல் டேங்கர் லாரி கவிழ்ந்து விபத்து

சென்னை குன்றத்தூர் அருகே பெட்ரோல் ஏற்றிவந்த டேங்கர் லாரி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. எண்ணூரில் இருந்து பெட்ரோல், டீசல் ஏற்றிக் கொண்டு குன்றத்தூர் நோக்கி சென்றபோது விபத்து ஏற்பட்டது. டேங்கர் லாரி விபத்தில் 4 ஆயிரம் லிட்டர் பெட்ரோல், 8 ஆயிரம் லிட்டர் டீசல் சாலையில் கொட்டி வீணானது. சாலையில் கொட்டிய பெட்ரோல், டீசலை தீயணைப்புத் துறையினர் நீரை ஊற்றி சுத்தம் செய்து வருகின்றனர்.

## உணவு டெலிவரிக்கு ZAAROZ என்ற புதிய ஆப்: ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் தகவல்




நாமக்கல் ஜூலை 6

உணவு டெலிவரிக்கு ZAAROZ புதிய ஆப் தொடங்குவதாக நாமக்கல் தாலுகா ஹோட்டல் உரிமையாளர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். டெலிவரிக்கு ZAAROZ என்ற புதிய செயலியை இனி பயன்படுத்தப்போவதாக உணவகங்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளனர். உணவு டெலிவரி நிறுவனங்கள் 35% வரை கமிஷன் எடுத்துக் கொள்வதாக உணவாக உரிமையாளர்கள் குற்றச்சாட்டு வைத்துள்ளனர்.

## தகைசால் தமிழர் விருதுக்கு காதர் மொகிதீன் தேர்வு: முதல்வருக்கு ஜவாஹிருல்லா வரவேற்பு



மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லாவெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களை பெருமைப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் 'தகைசால் தமிழர் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இதுகாறும் இவ்விருது விடுதலை போராட்ட வீரர்கள்சங்கரய்யா, ஆர்.நல்லகண்ணு, கி.வீரமணி மற்றும் இலக்கிய செல்வர் குமரி அனந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வரிசையில், 2025ம் ஆண்டுக்கான 'தகைசால் தமிழர் விருது'க்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கு வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன்.

மேலும் முதல்வருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். காதர் மொகிதீன், மனிதநேய பண்பாளர், பழகுவதற்கு இனிமையானவர், ஆரம்ப காலம் முதலே மனிதநேயத்துக்கும் மதநல்லிணக்கத்துக்கும் தம்மை அர்ப்பணித்து கொண்டு செயலாற்றியவர். இளம்வயது முதல் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, சிறுபான்மையின முஸ்லிம்களின் உரிமைக்காக நாடாளுமன்றம் வரை குரல் கொடுத்தவர். 80 வயதை கடந்தும் தொய்வில்லாமல் சமுதாய பணி ஆற்றிவரும் காதர் மொகிதீன் இவ்விருதுக்கு மிகவும் பொருத்தமானவர்.


## இன்றைய ராசி பலன்கள் (6.7.2025)

- **மேஷம்**: எதிர்பார்த்த செய்தி கைக்கு வரும். பண விஷயங்களில் சிக்கனம் கடைபிடிக்கவும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.
- **ரிஷபம்**: தொழிலில் சாதனை கிடைக்கும். மனநிம்மதி உருவாகும். பழைய கடன் பிரச்சனைக்கு தீர்வு வரும்.
- **மிதுனம்**: சிக்கல்கள் நீங்கும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். உறவினருடன் மனகசப்பு தவிர்க்கவும்.
- **கடகம்**: மனதிற்கு பிடித்த நிகழ்வு நடக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. பயணங்கள் தவிர்க்கலாம்.
- **சிம்மம்**: ஆவலுடன் செயல்படுவீர்கள். கஷ்டங்களுக்கு நட்புகள் துணையாக இருக்கும். கலைதுறையில் வெற்றி.
- **கன்னி**: புதிய முயற்சி வெற்றியளிக்கும். எதிர்பாராத வருமானம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.
- **துலாம்**: சமூகத்தில் மரியாதை கிடைக்கும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். பணவரத்து உயரும்.
- **விருச்சிகம்**: மனம் நிம்மதியாக இருக்கும். தொழிலில் சிறிய மாற்றம் ஏற்படும். சஞ்சலமாக இருக்கலாம்.
- **தனுசு**: தைரியம் அதிகரிக்கும். நீண்டநாள் திட்டம் நிறைவேறும். வழக்கு தீர்வு வரும்.
- **மகரம்**: குடும்பத்தில் சுமூகம் காணப்படும். பண வரத்து சீராகும். சில செயல்களில் சோம்பல் காட்ட கூடாது.
- **கும்பம்**: பயணச் சாதகங்கள் உண்டு. தொழிலில் மேன்மை காணப்படும். பழைய நண்பர் உதவுவர்.
- **மீனம்**: வேலைக்கான நல்ல வாய்ப்பு. குடும்பத்தில் நிம்மதி. கணினி தொடர்பான பணிகளில் முன்னேற்றம்.



திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் மற்றும் தொ.மு.ச.நலச் சங்க மண்டல செயலாளர் ஜீவா.டி. ஜெயக்குமார் ஆசிரியை இந்திராணி ஆகியோர் புதல்வி மோனிகா,M.Sc., B.Ed., PGDB.,சேலம் பாஸ்கரன் கவிதா ஆகியோர் புதல்வன் B. ஜோ பாஸ்கரன், M.B. A., திருமண வரவேற்பு நிகழ்ச்சி தாராபுரம் அரிமா அரங்கத்தில் நடந்தது. தமிழக அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன் மற்றும் கயல் விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வர சாமி தி.மு.க. முன்னணி பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். கல்வியாளர் டாக்டர்ஜெய்லானி மணமக்களுக்கு பரிசுவழங்கி வாழ்த்தினார். வரவேற்பு நிகழ்ச்சியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள்.

## தி ஹண்ட்" ஓடிடியில் வெளியான ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு



மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை சம்பவத்தை மையமாக வைத்து உருவான ஹண்ட் தொடர் ஓடிடியில் வெளியாகியுள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 1991 ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூரில் குண்டுவெடிப்பின் மூலம் படுகொலை செய்யப்பட்டார்.நாட்டையே உலுக்கிய இந்த சதிச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பதை இந்திய உளவுத்துறை எப்படி கண்டுபிடித்தனர் என்பதை மையமாகக் கொண்டு 'தி ஹண்ட்' என்கிற பெயரில் இணையத் தொடர் உருவாகியுள்ளது.

இயக்குநர் நாகேஷ் குகுநூர் இயக்கத்தில் அமித் சியால், சஹில் வைத், பகவதி பெருமாள் உள்ளிட்டோர் நடிப்பில் தயாரான இத்தொடர் இன்று சோனி லைவ் ஓடிடி தளத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் வெளியாகியுள்ளது.

ராஜீவ் கொலையாளிகளைப் பிடிக்க அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழுவில் அங்கம் வகித்த சில மூத்த அதிகாரிகள் எழுதிய புத்தகங்கள் உள்பட, மக்கள் செல்வாக்கு பெற்ற ஒரு இந்தியத் தலைவர் படுகொலை செய்யப்பட்ட சதியின் வரைபடத்தை அலசி ஆராயும் பல நூல்கள், புத்தகச்சந்தையில் பல மொழிகளில் நன்கு விலைபோயின. அனிருத்ய மித்ரா என்கிற புலனாய்வுப் பத்திரிகையாளர் எழுதி வெளியான புத்தகத்தின் தரவுகளைத் தழுவி, 7 அத்தியாயங்களைக் கொண்ட இத்தொடரை சோனி லிவ் தளத்துக்காகத் தேசிய விருதுபெற்ற இயக்குநர்களில் ஒருவரான நாகேஷ் குக்குனூரின் படைப்பாக்கக் குழுவினர் உருவாக்கியிருக்கிறார்கள்.

## இந்த வருடம்... இதுவரை வெளியான 128 படங்கள் எத்தனை ஹிட் தெரியுமா?




2025ம் ஆண்டின் முதல் பாதி சற்று சுவாரஸ்யமாக முடிந்திருக்கும் நிலையில், இதுவரை 128 தமிழ் படங்கள் வெளியாகி இருக்கின்றன. அதில், வெறும் 13 படங்கள் மட்டுமே வர்த்தக ரீதியில் வெற்றி பெற்றுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி இருக்கிறது.

தமிழ் சினிமாவில் கடந்த 6 மாதங்களில் வெளியான 128 படங்களில் 13 படங்கள் மட்டுமே வர்த்தக ரீதியில் வெற்றி பெற்றுள்ளதாக தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர் சங்கம் தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத கஜ ராஜா, டிராகன், குடும்பஸ்தன், பெருசு, பையர், மர்மர், குட் பேட் அக்லி, ரெட்ரோ, டூரிஸ்ட் பேமிலி, மாமன், குபேரா, டிஎன்ஏ, மார்கன் ஆகிய படங்கள் மட்டுமே தயாரிப்பாளர்களுக்கு கமர்சியல் சக்சஸ் கொடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

## தேசிங்கு ராஜா 2 டிரெய்லர் வெளியானது




'பசங்க' படத்தின் மூலம் அறிமுகமான விமல், எழில் இயக்கத்தில் கடந்த 2013ம் ஆண்டு 'தேசிங்குராஜா' என்ற படத்தில் நடித்திருந்தார். நல்ல வரவேற்பைப் பெற்ற இந்தப் படத்தின் 2ம் பாகம் தற்போது உருவாகி வருகிறது.

'தேசிங்குராஜா2'முதல்பாகத்தில்இருந்துவித்தியாசமான கதைக்களத்திலும் முதல் பாகத்தைபோல் காமெடி கலந்த கதைக்களத்திலும் தயாராகி உள்ளது. இந்த படத்தில் விமல் தவிர குக் வித் கோமாளி புகழ், ரவி மரியா, ரோபோ சங்கர், சிங்கம் புலி, கிங்ஸ்லி, ராஜேந்திரன், லொள்ளுசபா ஸ்வாமி நாதன் போன்றோர் நடித்துள்ளனர்.

இன்பினிட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு வித்யாசாகர் இசையமைத்துள்ளார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இப்படத்தின் வருகிற ஜூலை 11ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு நோக்கங்களுடன் கல்லூரியில் படிக்கும் 4 நண்பர்களை பின்னணியாகக் கொண்டு படத்தின் கதை அமைக்கப்பட்டுள்ளது. படத்தில் தெலுங்கு நடிகைகள் பூஜிதா பொன்னாடா, ஹர்ஷிதா நாயகிகளாக நடிக்கிறார்கள்

இந்த நிலையில் 'தேசிங்கு ராஜா 2' படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது. படம் ஜூலை 11ம் தேதி திரைக்கு வருகிறது.

## 2வது டெஸ்ட்: ஹாரி புரூக் ஜேமி சுமித்தின் 303 ரன்கள் பார்ட்னர்ஷிப்பை உடைத்த ஆகாஷ் தீப்



இந்தியா இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2வது போட்டி பர்மிங்காமில் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 151 ஓவர்களில் 587 ரன்கள் குவித்து ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக இந்திய கேப்டன் சுப்மன் கில் 269 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் சோயிப் பஷீர் 3 விக்கெட்டும், ஜோஷ் டாங்கு, கிறிஸ் வோக்ஸ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 2வது நாள் ஆட்டநேர முடிவில் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 77 ரன்கள் அடித்திருந்தது. ஜோ ரூட் 18 ரன்களுடனும் , ஹாரி புரூக் 30 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இத்தகைய சூழலில் 3வது நாள் ஆட்டம் இன்று தொடங்கியது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஜோ ரூட் (22 ரன்கள்), பென் ஸ்டோக்ஸ் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இருவரின் விக்கெட்டையும் ஒரே ஓவரில் சிராஜ் காலி செய்தார். இதனால் இங்கிலாந்து அணி 84 ரன்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்த இக்கட்டான சூழலில் 6வது விக்கெட்டுக்கு கைகோர்த்த ஹாரி புரூக் ஜேமி சுமித் கூட்டணி சிறப்பாக விளையாடி அணியை சரிவிலிருந்து மீட்டது. இந்திய பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்ட இந்த ஜோடியில் இருவரும் சதமடித்து அசத்தினர். இவர்களின் பார்ட்னர்ஷிப்பை உடைக்க முடியாமல் இந்திய அணி திணறியது. அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் 150 ரன்களை கடந்து அசத்தினர். இவர்களது பார்ட்னர்ஷிப்பும் 300 ரன்களை கடந்தது.

இந்திய அணியை அச்சுறுத்தி வந்த இந்த ஜோடியை ஒரு வழியாக ஆகாஷ் தீப் உடைத்தார். அவரது பந்துவீச்சில் ஹாரி புரூக் 158 ரன்களில் போல்டானார். 6வது விக்கெட்டுக்கு ஹாரி புரூக் ஜேமி சுமித் கூட்டணி 303 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து அசத்தியது குறிப்பிடத்தக்கது. அடுத்து வந்த கிறிஸ் வோக்சையும் (5 ரன்கள்) ஆகாஷ் தீப் காலி செய்தார்.

தற்போது வரை இங்கிலாந்து அணி 87 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 395 ரன்கள் அடித்துள்ளது. ஜேமி சுமித் 173 ரன்களுடனும், பிரைடன் கார்ஸ் ரன் எதுவுமின்றியும் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து அணி இன்னும் 192 ரன்கள் பின்தங்கி உள்ளது.

## பர்மிங்காம் டெஸ்ட்: 3ம் நாள் முடிவில் 244 ரன்கள் முன்னிலை பெற்ற இந்தியா

இந்தியா இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2வது போட்டி பர்மிங்காமில் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 151 ஓவர்களில் 587 ரன்கள் குவித்து ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக இந்திய கேப்டன் சுப்மன் கில் 269 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் சோயிப் பஷீர் 3 விக்கெட்டும், ஜோஷ் டாங்கு, கிறிஸ் வோக்ஸ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 2வது நாள் ஆட்டநேர முடிவில் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 77 ரன்கள் அடித்திருந்தது. ஜோ ரூட் 18 ரன்களுடனும் , ஹாரி புரூக் 30 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இத்தகைய சூழலில் 3வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஜோ ரூட் (22 ரன்கள்), பென் ஸ்டோக்ஸ் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இருவரின் விக்கெட்டையும் ஒரே ஓவரில் சிராஜ் காலி செய்தார். இதனால் இங்கிலாந்து அணி 84 ரன்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்த இக்கட்டான சூழலில் 6வது விக்கெட்டுக்கு கைகோர்த்த ஹாரி புரூக் ஜேமி சுமித் கூட்டணி சிறப்பாக விளையாடி அணியை சரிவிலிருந்து மீட்டது. இந்திய பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொண்ட இந்த ஜோடியில் இருவரும் சதமடித்து அசத்தினர். இவர்களின் பார்ட்னர்ஷிப்பை உடைக்க முடியாமல் இந்திய அணி திணறியது. அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் 150 ரன்களை கடந்து அசத்தினர். இவர்களது பார்ட்னர்ஷிப்பும் 300 ரன்களை கடந்தது. இந்திய அணியை அச்சுறுத்தி வந்த இந்த ஜோடியை ஒரு வழியாக ஆகாஷ் தீப் உடைத்தார். அவரது பந்துவீச்சில் ஹாரி புரூக் 158 ரன்களில் போல்டானார். 6வது விக்கெட்டுக்கு ஹாரி புரூக் ஜேமி சுமித் கூட்டணி 303 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து அசத்தியது குறிப்பிடத்தக்கது. பின்னர் களமிறங்கிய வீரர்கள் நீண்ட நேரம் தாக்குப்பிடிக்கவில்லை. கிறிஸ் வோக்ஸ் 5 ரன்களிலும், பிரைடன் கார்ஸ், ஜோஷ் டாங் மற்றும் ஷோயப் பஷிர் ஆகியோர் ரன் எதுவுமின்றியும் ஆட்டமிழந்தனர். முடிவில் 89.3 ஓவர்கள் தாக்குப்பிடித்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 407 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இது இந்திய அணியை விட 180 ரன்கள் குறைவானதாகும். இங்கிலாந்து தரப்பில் ஜேமி சுமித் 184 ரன்களுடன் கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இந்தியா தரப்பில் முகமது சிராஜ் 6 விக்கெட்டுகளும், ஆகாஷ் தீப் 4 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதையடுத்து இந்திய அணி தனது 2வது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக கே.எல். ராகுலும், ஜெய்ஸ்வாலும் களமிறங்கினர். ஜெய்ஸ்வால் 28 ரன்கள் எடுத்து டாங்கு பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். 3ம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்புக்கு 64 ரன்கள் எடுத்துள்ளது. அத்துடன், 244 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. கே.எல்.ராகுல் 28 ரன்னுடனும், கருண் நாயர் 7 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். நாளை 4ம் நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.